**Spl.SC.No. 41/2023** Dated:. 16.02.2026

( 1ம் எதிரி ஆஜர். 2ம் எதிரி ஆஜர்படுத்தப்படவில்லை.)

**அ.சா.1 பாலமுருகன்**

**மனுவின் அடிப்படையில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

மதுபானக்கடை கிருஷ்ணாதியேட்டர் எதிர்புறமும் காக்காதோப்பிலும் உள்ளது என்றால் சரிதான். காக்காதோப்பு மதுபானக்கடை கிருஷ்ணா தியேட்டரிலிருந்து அரை கி.மீ தூரத்தில் இருக்கும் என்றால் சரிதான். நான் காக்காதோப்பிற்கு எங்கிருந்து கிளம்பி சென்றேன் என்றால் ஒர்க் ஷாப்பிலிருந்து. ஒர்க் ஷாப்பிற்கும் காக்காதோப்பு மதுபானக்கடைக்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 300 மீ. ஒர்க் ஷாப்பிலிருந்து கிளம்பும்போது மணி எத்தனை இருக்கும் என்றால் மதியம் 3.00 மணி. மதுபானக்கடைக்கு சென்று சேர்ந்தபோது மணி எத்தனை இருக்கும் என்றால் 4-4.15 இருக்கும். 2ம் எதிரி அரசு பாண்டி மகன் அருண்குமாருக்கும் எனக்கும் ஏற்கனவே பேச்சு வார்த்தை இல்லை என்றால் சரிதான். நான் பரமக்குடி அரசு மருத்துவமனைக்கு சென்றபோது மணி எத்தனை இருக்கும் என்றால் நான் மயக்கத்தில் இருந்ததால் எத்தனை மணி என கூற இயலாது. மருத்துவர் என்னிடம் எனக்கு எவ்வாறு காயம் ஏற்பட்டது என்பதை விசாரித்தாரா என்றால் விசாரித்தார். மருத்துவர் என்னை விசாரிக்கும்போது மாலை 5.40 மணியளவில் கிருஷ்ணா தியேட்டர் அருகே இனம் தெரியாத ஒரு நபர் தாக்கியதால் காயம் ஏற்பட்டதாக நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஒர்க் ஷாப்பிலிருந்து நான் காக்காதோப்பு ஒயின்ஷாப்பிற்கு என்னுடைய

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.02.16 15:37:56 +0530

இருசக்கர வாகனத்தில் சென்றேனா என்றால் ஆமாம். காக்காத்தோப்பு மதுபான பாருக்கு நான் சென்றபோது அங்கு 20 நபர்கள் மது அருந்திகொண்டிருந்தார்கள் என்றால் சரிதான். நான் மதுபானம் அருந்திய பிறகுதான் வழக்கு சம்பவம் நடைபெற்றது என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதியன்று ஏபிசி மஹாலில் விழாவிற்கு செல்வதாக இருந்தேன் என்றால் சரிதான். நான் சொன்ன மாதிரி, சொன்ன நேரத்தில், இடத்தில் விதத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும் நான் மதுபோதையில் இருசக்கர வாகனத்தில் ஏபிசி மகாலுக்கு போகக்கூடிய சமயத்தில் கீழே விழுந்துவிட்டதால் காயம் ஏற்பட்டது என்றும், ஏற்கனவே 2ம் எதிரி மீது இருந்த முன்விரோதத்தினால் அவருக்கு வேண்டாதவர்களின் தூண்டுதலின்பேரில் நான் பொய்யாக புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. புகார் கொடுக்கும்போது மணி எத்தனை இருக்கும் என்றால் இரவு சுமார் 8.00மணி இருக்கும். இந்த வழக்கு சம்பந்தமாக டிஎஸ்பி என்னை எப்போது விசாரித்தார் என்றால் ஞாபகமில்லை. சம்பவத்தின்போது எனக்கு ஏற்பட்ட காயத்தினால் நான் அணிந்திருந்த சட்டையில் இரத்தம் பட்டதா என்றால் பட்டது. அதை விசாரைணையின்போது டிஎஸ்பியிடம் கொடுத்தேனா என்றால் கேட்கவில்லை என்பதால் கொடுக்கவில்லை. சம்பவ இடத்தில் இரத்தம்

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2026.02.16 15:38:00 +0530

தரையில் பட்டதா என்றால் இல்லை. 2ம் எதிரிக்கும் இந்த வழக்கு சம்பவத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.02.16 15:38:05 +0530

Sessions Judge,
Special Court for Trial of Cases Registered under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)

**Spl.SC.No. 41/2023** Dated:. 16.02.2026

( 1ம் எதிரி ஆஜர். 2ம் எதிரி ஆஜர்படுத்தப்படவில்லை.)

**அ.சா.2 மோகன்ராஜ்**

**மனுவின் அடிப்படையில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

அ.சா.1 பாலமுருகன் எனக்கு உறவினர் என்றால் சரிதான். நான் மெக்கானிக் ஷாப் கடை எங்கு வைத்துள்ளேன் என்றால் கிருஷ்ணா தியேட்டர் அருகில் . என்னுடைய ஒர்க் ஷாப்பிலிருந்து காக்காத்தோப்பு ஒயின்ஷாப் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் அரை கி.மீ. நான் இருசக்கர வாகனத்தில்தான் ஒயின்ஷாப்பிற்கு சென்றேனா என்றால் ஆமாம். ரீப்பர் கட்டை எத்தனை அடி இருக்கும் என்றால் 2 அடிக்குள் இருக்கும். அந்த ரீப்பர் கட்டை பழையதா புதியதா என்றால் புதியது. மதுபானபாரில் நான் சென்றபோது 20க்கும் மேற்பட்ட நபர்கள் மது அருந்திக்கொண்டிருந்தார்கள் என்றால் சரிதான். நான் மது அருந்திய பிறகுதான் சம்பவம் நடந்தது என்றால் சரியல்ல. மதுபானக்கடைக்கு செல்லும்போதுதான் சம்பவம் நடந்தது. நான் மதுபானக்கடைக்கு சென்று சேர்ந்தபோது மணி எத்தனை இருக்கும் என்றால் மாலை சுமார் 5.00 மணி இருக்கும். அ.சா.1 ஐ பரமக்குடி அரசு மருத்துவமனைக்கு நான் அழைத்து சென்றபோது மணி எத்தனை இருக்கும் என்றால் மாலை 6-6.30 இருக்கும். இந்த வழக்கு சம்பந்தமாக டிஎஸ்பி என்னை எப்போது விசாரித்தார் என்றால் சம்பவம் நடந்த அன்று மருத்துவமனையில் இரவு 8.00 மணிக்கு விசாரித்தார் . அதற்கு முன்பு என்னை விசாரிக்கவில்லையா என்றால் ஆமாம். புகார் வாக்குமூலம் வாங்கும்போது மணி எத்தனை

C MOHAN RAM Digitally signed by C MOHAN RAM Date: 2026.02.16 15:38:10 +0530

இருக்கும் என்றால் 7-7.30 இருக்கும். நான் கையெழுத்து போடும்போது மணி எத்தனை இருக்கும் என்றால் இரவு 8.10 இருக்கும். என் தம்பியை அழைத்து செல்லும்போது என் சட்டையில் எந்த இரத்தமும் படவில்லை என்றால் சரிதான். நான் சொன்ன மாதிரி, சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், புகார்தாரர் என் தம்பி என்பதாலும் அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.1 இருசக்கர வாகனத்தில் சென்றதால் காயம் ஏற்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. 2ம் எதிரிக்கும் இந்த வழக்கு சம்பவத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2026.02.16 15:38:14 +0530

Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)